தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 13, செவ்வாய்க்கிழமை

மாசி 30, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் ''

போர்க்களத்தில் சாவதற்குத் துணிந்தவர் பலராக இருக்கலாம். ஆனால் அவையிலே அஞ்சாது பேச வல்லவர் சிலரே யாவர்.

1. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 285, 286, 287 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் கோட்டையைச் சீர்திருத்தம் செய்யும் திட்டம்

288—(*வினா எண் 10118)—திரு. இரா. தாமரைக் கனி : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் கோட்டையைச் சீர்திருத்தம் செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ). மாநில அரசின் மேற்பார்வையிலுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்குள்ள ஓய்வு இல்லத்தில் வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு ரூ. 5,942-80-ம், வரவேற்பு வளைவில் வாசகங்கள்

எழுதுவதற்கும், மின்சார மோட்டாரை செப்பனிடவும், ரூ 467ம் 1980–81 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஏற்கெனவே உள்ள கிணறை ஆழப்படுத்துவதற்கு ரூ. 2,500 அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கீரிப்பாறை அரசு இரப்பர் தோட்டத்திலுள்ள தொழிலாளர் இல்லங்கள்

289—(*வினா எண் 18276)—திரு. டி. மணி; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டத்தின் கீரிப்பாறை தோட்டத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள தொழிலாளர் இல்லங்களுக்கு மின விளக்கு வசதி, குடிநீர்வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், எப்போது இவ்வசதிகள் செய்துதரப் படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, கீரிப்பாறை மற்றும் பல்வேறு தொழிலாளர்கள் தங்குகின்ற விடுதிகளில்—ஏற்கெனவே கடந்த வருடம் ஆரம்பத்திலே அந்த விடுதிகள் கட்டப்பட்டன—நான் சென்று பார்த்தபோது பல மாதங்களாக அவர்களுக்கு மின்சார இணைப்பும், தண்ணீர் இணைப்பும் கொடுக்கப்படாமல் இருந்தது. ஆகவேதான், நான் இந்தக் கேள்வியைப் போட்டிருந்தேன். அது இப்போது வழங்கப்பட்டு வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே 154 வீடுகள் அடங்கிய 22 வரிசைகள கொண்ட தொழிலாளர்கள் குடியிருப்புகள கட்டி முடிக்கப்பட்டு விட்டன. அவற்றுக்கு மின வசதியும், குடிநீர் வசதியும் கொடுக்கப்பட்டு விட்டன. தற்சமயம் 105 வீடுகள் அடங்கிய 15 வரிசை கொண்ட தொழிலாளர் குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு வடுதிகளில் இம்மாதிரி மின்சார இணைப்பும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கொடுக்காத நிலைமை இருக்கின்றது. இந்நிலை கீரிப்பாறையில் மட்டுமல்ல. அரசின் பல்